**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.535/2018**

**Defense Witness : 1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : சின்னச்சாமி | **Caste** | : | |
| **Father's Name** | : ஈஸ்வரன் | **Calling** | : | விவசாயம் |
| **Village** | : கேத்தனூர் | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **60/2025** |
| | | **Dated** | : | **07.11.2025** |

**07.11.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

<u>**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கு காசோலை வங்கி கணக்கு தவிர வேறு எதுவும் கணக்கு உண்டா என்றால் இதைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த வழக்கு காசோலை என்னுடைய தனிப்பட்ட காசோலை என்றால் சரிதான். பாரகன் பேசன்ஸ் என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கு எங்கு உள்ளது என்றால் சிட்டி யூனியன் பேங்க் பல்லடம் அங்கு மட்டும் தான் உள்ளது. அது நடப்பு கணக்கு என்றால் சரிதான். இந்த புகார் காசோலையானது சேமிப்பு கணக்கு என்றால் சரிதான். எவ்வளவு காலமாக நான் வங்கி மூலமாக வரவு செலவு செய்துவருகிறேன் என்றால் 35 வருடங்களாக செய்துவருகிறேன். பத்து வருட காலமாக எனது வங்கி கணக்கில் வரவு செலவு எதுவும் நடந்தால் எனது தொலைபேசிக்கு குறுஞ்செய்தி வரும் என்றால் சரிதான். நானும் புகார்தாரரும் நிறுவனத்தை பொறுத்து வாடகை ஒப்பந்தம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். அந்த வாடகை ஒப்பந்தத்தில் முன்பணமாக 5 இலட்சம் என்றும் மாத வாடகை 2 இலட்சம் என்றும் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால்

சரிதான். **என்னிடம் காட்டப்படும் மேற்படி ஒப்பந்தம் ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது(XEROX என்பதால் ஆட்சியபனையோடு குறியீடு செய்யப்படுகிறது).**

புகார்தாரரும் நானும் ஒப்பந்தத்தில் பங்குதாரராக இருக்கும்பட்சத்தில் புகார்தாரர் மட்டும் மாதம் 2 இலட்சம் ரூபாய் சரத்து உள்ளதா என்றால் உள்ளது ஆனால் மேற்படி ஒப்பந்ததத்தில் என்னிடம் ஏமாற்றி கையொப்பம் செய்தார்கள். மேற்படி ஒப்பந்தம் தமிழில் உள்ளபோது எனக்கு அதில் உள்ள சரத்துகள் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் அது எனது கவனத்திற்கு வரவில்லை. எங்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட 4 ஆவணங்களும் ஜெராக்ஸ் நகல் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.தா.சா.3 ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஆடிட்டர் மூலமாக தெரியும். அந்த 3ம் பக்கத்தில் முதல் பத்தியில் வெளியேறும்போது வெளியேறும் பங்குதாரரரான புகார்தாரர் அனைத்து வரவு செலவையும் முடித்துவிட்டார் என உள்ளது என்றால் சரிதான். அதேபோல் இரண்டாம் பத்தியில் அவா் எல்லா கணக்குவழக்குகளையும் முடித்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வெளியேறும் பங்குதாரரான புகார்தாரர் எந்த பாக்கி தொகையும் தரவேண்டும் என்ற குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் புரோடெக்சன் சரியாக இல்லாத பட்சத்தில் நான் எ.தா.சா.3ல் குறிப்பிட்டிருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு மிசின்களில் குறைபாடு உள்ளதாகவோ அல்லது புரோடைக்சன் சரியாக வரவில்லை என்றோ என்னை ஏமாற்றினார்கள் என்றோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

நான் மிசின்களை ஏற்கனவே வேறு கம்பெனியில் இருந்து வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எ.தா.சா.4 ல் எனது தரப்பு வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள முகவரிதான் வழக்கு புகார் மற்றும் அறிவிப்பிலும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு ஒரே முகவரியாக இருக்கும்பட்சத்தில் ம.சா.ஆ. 7 ஆன வழக்கறிஞர் அறிவிப்பை வேண்டும் என்றே தெரிந்து நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் மேற்படி அறிவிப்பு என்னிடம் வரவில்லை. நீதிமன்றத்தில் இருந்து மட்டும் தான் இதே முகவரியில் வந்தது. 22 1/2 இலட்சம் நான் புகார்தாரருக்கு தரவேண்டும் என்பதால் தான் அவர் எனக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரியல்ல. எனது பதில் அறிவிப்பான எ.தா.சா.4ல் எனக்கு புகார்தாரர் தான் 25 இலட்சம் தரவேண்டும் என்று நான் அறிவிப்பு அனுப்பிவைக்கும் பட்சத்தில் அது சம்மந்தமாக ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரருக்கும் எனக்கும் சமாதானம் ஏற்பட்டு 09.06.2018க்கு பிறகு வழக்கு புகார் காசோலை இரண்டு தலா 5 இலட்சத்திற்கும் மற்றும் மற்றொரு 5 இலட்சத்திற்கான காசோலை புகார்தாரருக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு புகார் காசோலைகள் இல்லாமல் மற்றொரு 5 இலட்சத்திற்கான காசோலையை

வங்கியில் புகார்தாரர் செலுத்தி அவரது கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் ஸ்டேட்மெண்ட் வங்கியில் இருந்து வந்த பிறகு தான் எனக்கு தெரியும். விவரம் தெரிந்த பின்பு மீதமுள்ள இரண்டு காசோலைகளை வங்கிக்கு பணப்பட்டுவாடா செய்ய நிறுத்திவைக்கவேண்டும் என்று வங்கிக்கு நான் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

மேற்படி காசோலையை தவறாக பயன்படுத்தியிருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் புகார்தாரர் புகார் கொடுக்கவேண்டாம் என சொன்னதால் புகார் கொடுக்கவில்லை. மீதம் உள்ள இரண்டு காசோலையை புகார்தாரர் கிழித்துவிட்டேன் என்று சொன்னதால் நானும் நம்பிக்கையாக புகார் கொடுத்துள்ளேன். மேற்சொன்னவாறு புகார்தாரர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் என்னிடம் கேட்கப்பட்ட 1st questioning மற்றும் 313 questioning ல் உள்ள கையொப்பமும் காசோலையில் உள்ள கையொப்பமும் என்னுடையதா என்றால் இல்லை நான் காசோலை கொடுக்கவும் இல்லை கையொப்பமும் செய்யவும் இல்லை. மேற்படி காசோலைகள் வங்கியில் இருந்து போதிய பணம் இல்லை என்றுதான் திருப்பப்பட்டதே தவிர கையொப்பம் ஒன்றாக இல்லை என்று திருப்பபடவில்லை என்றால் வங்கியில் இருந்து அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை. நீதிமன்றத்தில் போடப்பட்டுள்ள கையொப்பத்தை இவ்வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்தோடு கையொப்பம் ஆய்விற்கு அனுப்ப எனக்கு ஆட்சியேபனை இல்லை என்றால் ஆட்சியேபனை இல்லை. எனக்கு புகார்தாரர் கொடுத்த பணத்திற்கு நான் காசோயை கொடுக்கவில்லை என்றாலும் அந்த காசோலைகள் புகார்தாரர் நிறுவனத்தில் இ்ருந்து விலக்கப்பட்ட போது கொடுத்த காசோலைகள் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் பெற்ற கடனுக்காக காசோலை கொடுத்ததால் சட்டப்படி நான் பணம் கொடுக்க கடமைப்பட்டவன் என்றும் வழக்கில் தண்டிக்கபடவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2025.11.07 15:18:46 +0530

Judicial Magistrate No.II
Dindigul.